# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண்: 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

28441286 / 28440938 / 28443601 e-mail: tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஆ.பெரியசாமி**
**கோ.பழனியம்மாள்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**மு.செல்வராணி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

துணை பொதுச்செயலாளர்கள்
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**தெ.வாசுகி**

மாநிலச் செயலாளர்கள்
**சா.டானியல் ஜெயசிங்**
**உ.சுமதி**
**ச.ஹேமலதா**
**ஆ.அம்சராஜ்**
**சா.கோதண்டபாணி**
**அ.குபேரன்**


கடித எண்..28/2022 நாள்..01.03.2022

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
தலைமைச் செயலகம்,
சென்னை-600009

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

பொருள் : அரசு ஊழியர், ஆசிரியர்களின் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுதல் - தொடர்பாக

---

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து ஊழியர்களின் உரிமைகளுக்காக போராடி வருகிற இயக்கமாகும், அரசு நலத் திட்டங்கள் மற்றும் தமிழகத்தில் எற்படும் இயற்கை சீற்றங்களின்போது அரசுக்கு அச்சாணியாக களத்தில் நின்று பணியாற்றும் நாங்கள் மழை வெள்ளம், புயல், சுனாமி, கொரோனா பெருந்தொற்று போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்பட்ட போது தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டங்களில் களத்திற்கு சென்று மக்களுக்கான உதவிகளை செய்பவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள். அதுமட்டுமல்ல " **மக்களை நோக்கி பயணம்**" என்ற இலட்சிய நோக்கத்தோடு தமிழகத்தில் படித்த இளைஞர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்பு, மருதுதவ முகாம், கண்தானம், உடல்தானம், கிராமங்களை தத்து எடுப்பது போன்ற சமூகப் பணிகளை செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான பார்வைக்கு கொண்டு வருகின்றோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601



தமிழ்நாடு அரசு ஊழியர்கள் போராடிப் பெற்ற பல்வேறு உரிமைகள் கடந்த 10 ஆண்டு அதிமுக ஆட்சிக் காலத்தில் பறிக்கப்பட்டன. அந்த கோபம் அகலாத நிலையில் சட்டமன்ற தேர்தலில் கடந்த அரசாங்கம் வீழ்த்தப்பட்டுவிட்டது. மக்களின் பேராதரவோடும், அரசு ஊழியர்களின் பெரும் முயற்சியினாலும் இடைவிடாத ஊழியர் பிரச்சாரங்களினாலும் தங்களது தலைமையில் திமுக அரசு பொறுப்பு ஏற்றுள்ளது. இந்தியாவிலேயே மக்கள் சேவையிலும், கொரோனாவில் மக்களை பாதுகாத்ததிலும் சிறப்பான மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாடே அறிந்துள்ளது. அரசு ஊழியர்களும் தங்களது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவீர்கள் என்ற எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள். அதற்கு தகுந்தாற்போல் கடந்த இரண்டு ஆண்டுகளாக முடக்கப்பட்ட அகவிலைப்படியை 2021 டிசம்பர் 28ம் தேதியே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தது மிகுந்த நம்பிக்கையை அரசு ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்தியுளளது.

2021 டிசம்பர் 18,19ஆம் தேதிகளில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் தங்களது தலைமையிலான அரசு சொன்ன வாக்குறுதியை அனைத்தையும் நிறைவேற்றித் தரும் என்ற நம்பிக்கை அளித்ததோடு அல்லாமல் அரசு ஊழியர்கள் இல்லை என்றால் அரசாங்கம் இல்லை. அரசு ஊழியர்கள் தான் அரசாங்கத்தை நடத்தக்கூடியவர்கள் என்று கூறி நான் உங்களுடன் இருக்கிறேன் என்று நம்பிக்கையூட்டி மிகச் சிறந்த உரையாற்றினார்.

மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலந்து கொண்ட 14ஆம் மாநில மாநாட்டில் 100க்கு மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு , அந்த தீர்மானங்கள் கோரிக்கைகளாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் பல்வேறு துறைவாரியான கோரிக்கைகளும் உள்ளடக்கி உள்ளது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அதில் பிரதான கோரிக்கையான புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்திட வேண்டும்.**

27.01.2021ம் தேதி மதுரையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாட்டிலும், திமுகவின் தேர்தல் அறிக்கையிலும் கழக அரசு ஆட்சிக்கு வந்தால் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து அனைவருக்கும் பயனளிக்கும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உறுதி அளித்தார். இன்னும் நம்பிக்கையோடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இருக்கிறோம். இதன் மூலம் லட்சக்கணக்கான புதிய ஓய்வூதியத் திட்டத்திலுள்ள அரசு ஊழியர்களின் வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டுமென மாண்புமிகு

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601




தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொள்கிறோம். **சமீபத்தில் ராஜஸ்தான் மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிப்பு செய்திருப்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.**

திராவிட முன்னேற்ற கழகத்தை பொறுத்தவரை ஏனோதானோ என்று வாக்குறுதிகளை அள்ளி விடும் கட்சியாக நாங்கள் பார்க்கவில்லை. மாண்புமிகு முதல்வரே நீங்கள் உங்களால் முடியும் என்று நம்புவதைதான் சொல்வீர்கள். சொன்னதைத் தவறாமல் செய்வீர்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை தமிழக அரசுத் துறையில் பணிபுரியும் ஒவ்வொரு அரசு ஊழியருக்கும் உள்ளது. அதேபோல் தமிழக மக்களிடமும் உள்ளது. அதனால் தான் நகர்புற உள்ளாட்சி தேர்தலில் மீண்டும் தமிழக மக்களின் மிகப்பெரிய நம்பிக்கையை பெற்றுள்ளீர்கள். நீங்கள் சொல்வதை செய்யும் முதல்வராகவே இருக்கிறீர்கள். அப்படியே இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

தமிழக அரசு நிறைவேற்ற உள்ள 2022-2023ஆம் ஆண்டு நிதி-நிலை அறிக்கையில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உள்ளிட்ட கோரிக்கைகளுக்கான தீர்வை ஏற்படுத்திதரும் பட்ஜெட்டாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் கவனத்தில் கொண்டு எங்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டுமென கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

**( மு. அன்பரசு )**
மாநிலத் தலைவர்
98401 – 87508

**( ஆ.செல்வம் )**
பொதுச் செயலாளர்
94439 – 30500